செ.வெ.எண்:35 நாள்:19.12.2017

நாகப்பட்டினம் மாவட்டம்

**ஒக்கி புயலால் ஏற்பட்ட கடல் சீற்றத்தில் சிக்கி உயிரிர்ந்த மீனவர் குடும்பத்துக்கு தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட நிவாரணத் தொகையாக ரூ.14 லட்சம் மதிப்பிலான காசோலையினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் வழங்கினார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் வட்டம் செருதூர் கிராமத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் 27.11.2017 அன்று கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்பட்டினம் துறைமுகத்திலிருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்று, லட்சத்தீவிற்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, 30.11.2017 அன்று வீசிய ஒக்கி புயலால் ஏற்பட்ட கடல் சீற்றத்தால் அவர்கள் பயன்படுத்திய படகு(IND-KL-04MM-1281) நிலைதடுமாறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அப்போது கடலில் தத்தளித்த 4 பேரும் நீந்திக் கரைசேரந்த போது, அதில் 3 பேர் உயிர் பிழைத்தனர். கீழ்வேளூர் வட்டம் செருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.சபிணன் தபெ சந்திரன் என்பவர் துரதிருஷ்டவசமாக உயிரிழந்தார்.

ஒக்கி புயலால் உயிரிழந்தவர்களுக்காக தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள ரூ.20 லட்சம் நிவாரணத் தொகையில் ஏற்கனவே ரூ.6 லட்சம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் காசோலையாக வழங்கப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள நிவாரணத் தொகை ரூ.14 லட்சத்திற்கான காசோலையினை உயிரிழந்த திரு.சபிணன் என்பவரது குடும்பத்தினரிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது நாகப்பட்டினம் மீன்வளத்துறை இணை இயக்குநர் திருமதி.ரீனா செல்வி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், கீழ்வேளூர் வட்டாட்சியர் திரு.மணிவண்ணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
நாகப்பட்டினம்